பக்கங்கள் - 14

# காலை முரசு

## மறு அறிவித்தல் வரையும் A/L பரீட்சை ஒத்திவைப்பு!

மறு அறிவித்தல் வரை க.பொ.த. உயர் தரப் பரீட்சை ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக, உயர்தரப் பரீட்சை உட்பட அனைத் 03▶

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 12 சனிக்கிழமை 29.11.2025 | அதிர்வு 121





# அனர்த்த உயிரிழப்பு நூறைத் தாண்டியது

## மேலும் அதிகமானோரைக் காணோம்

இலங்கையை கடந்த சில தினங்களாக வாட்டி வதைத்து வரும் கடும் மழை, வெள்ளம், புயல், மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களால் உயிரிழந் தவர்களின் எண்ணிக்கை நூறுக்கும் அதிகம் என்று கூறப்படுகின்றது. மேலும் அதிகமான எண்ணிக்கையானோர் காணா மல் போயிருக்கின்றனர்

இலங்கையில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக பல்வேறு மாவட் டங்களில் மேலும் பல இறப்புகள் பதிவாகியுள்ளன.

பதுளை மாவட்டத்தில் மட்டும் பேரழிவு காரணமாக 35 பேர் இறந்துள்ளனர் என பதுளை மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார். 03▶

## சுகாதாரத் துறை ஒரு வாரத்துக்கு அவசர நிலையாகப் பிரகடனம்!

நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளம், மண்சரிவு உள்ளிட்ட அனர்த்த நிலைமை களுக்கு முகங்கொடுக்கும் வகையில், சுகாதார அமைச்சு நேற்று முதல் டிசம்பர் 4 ஆம் திகதிவரை ஒரு வார காலத்துக்கு சுகாதாரத் துறைக்கு அவசர நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை சுகாதார அமைச்சின் செயலாளரினால் அனைத்து மருத்துவமனை மற்றும் சுகாதார நிறுவனங்களினது தலைவர் களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பொதுமக்களுக்கு 03▶

## இன்று காலை முரசு இதழ் குறைந்த பக்கங்களுடன்

பேரிடர் நெருக்கடிகளினால் ஏற்பட்ட மின்வெட்டு மற்றும் தொழில் நுட்பப் பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கள் காரணமாக பிராந்தியங் களில் செய்தியாளர்களின் செயற் பாடுகளிலும் யாழ்ப்பாணத்தில் முரசு அலுவலகப் பணியாளர்களின் செயற்பாட்டிலும் பாதிப்புகள் 03▶




நேற்று புயல், மழை, வெள்ளம், மண்சரிவு என்று இயற்கை அனர்த்தம் பற்றிய செய் திகளை துளாவுவதில் ஸீரியஸாக இருந்தேன். அச்சமயத்தில் எங்களது அலுவலக ஆஸ்தான செய்தியாளர் தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

எடுத்த கையோடு 'ஒப்பரேஷன் பூமாலை - இரண்டு' தொடங்கி விட்டது என்றார் அவர்.

நான் எங்கே என்று திடுக்குற்றுக் கேட்டேன்.

அவர் தமது வழமைப் பாணியில் "செய்தி அனுப்பி இருக்கிறேன். அதில் விவரம் பாருங் கள்!" - என்றார்.

மின் அஞ்சலில் செய்தியைப் பார்த்தேன். எனக்கும் சிரிப்பு வந்தது. அது விடயத்தை வாசகர்களுடன் பகிர்வதற்கு முன்னர், 'ஒப்ப ரேஷன் பூமாலை' என்பது பற்றி வாசகர்களுக்கு ஒரு 'பிளாஷ்பாக்' சொல்லுவது பொருத் தமானது என்று நினைக்கிறேன்.

1987 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் யாழ்குடா நாட்டைப் புலிகளிடமிருந்து மீட்கும் நடவடிக் கையாக வடமராட்சியில் 'ஒப்பரேஷன் 04▶



# களனி கங்கை பெருக்கெடுப்பு கொழும்பிலும் பேரிடர் ஆபத்து

களனி கங்கை பெருக்கெடுப்பதன் காரணமாக கொழும்பு – கொலன்னாவை பகுதியில் இருந்து மக்கள் நேற்றுப் பிற்பகல் முதல் வெளியேறி வருகின்றனர்.

வெல்லம்பிட்டியவில் பொலிஸார் உடனடியாக வெளியேறுமாறு மக்களுக்கு விடுத்த அறிவிப்பின்படி மக்கள் உடனடியாக வெளியேறத் தொடங்கினர்.

நாட்டில் நிலவும் மோசமான காலநிலை காரணமாக களனி கங்கை பகுதிக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

களனி ஆற்றில் நீர் மட்டம் அதிகரித்தால் தலைநகர் கொழும்பின் கொழும்பு, கொலன்னாவ மற்றும் வத்தளை நகர சபைப் பிரிவுகள் இவ்வாறு வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டுக்குப் பிறகு களனி கங்கையில் பதிவான மிக மோசமான வெள்ளப்பெருக்கு இதுவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

களனி ஆற்றின் நீர்மட்டம் அதிகரித்து வருகின்றமையினால் 2016 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தை விட கொழும்பு மோசமான வெள்ளத்தை சந் திக்க நேரிடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவிசாவெல்லவில் உள்ள நீர் மானிபடி, இன்று இரவு அல்லது அதற்குப் பிறகு கொழும்பில் 2016 வெள்ளத்தை விட மோசமான வெள்ளம் ஏற்பட வாய்ப்புள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல் 1.00 மணிக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், அடுத்த 24 மணி நேரத்திற்குள் இந்த நிலைமை ஏற்படக்கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டது.

களனிகங்கைப் பகுதிக்கு அருகே உள்ள மக்களை உடனடியாக வெளியேறுமாறு நீர்ப்பாசனத் திணைக்களமும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த சூழ்நிலையிலிருந்து உயிர்களைப் பாதுகாக்கவும், பாதுகாப்பான இடங்களை விரைவில் அடையவும் பொதுமக்கள் தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொழும்பில் உள்ள ஆர். பிரேமதாச மைதானம் 3000 பேருக்கு அவசர பேரிடர் மையமாகத் தயாராகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# கம்பஹாவிலும் நேற்று மாலை பதற்றம்

இன்னும் இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்குள் கம்பஹா நகரமே வெள்ளத்தில் மூழ்கலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளதால் அங்கு நேற்றிரவு பெரும் பதற்றம் நிலவியது.

பெரு வெள்ளம் வரும் என்பதாகல் அப்பகுதி மக்களை உடனடியாக வெளியேறுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நிலவும் மோசமான வானிலை காரணமாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் விடுக்கப்பட்ட எச்சரிக்கை மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்ள பொதுமக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அவசர நிலைகளின் போது இடர் நிலைகளை தெரியப்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# பல்கலை மாணவர்கள் பாதுகாப்பாக உள்ளனர்

## கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக் கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் உள்ள அனைத்து மாணவர்களும் பாதுகாப்பாக உள்ளனர் என கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க கலுவெவ தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை உறுதிப்படுத்தினார்.

அதன்படி, புலத்திசிபுர மற்றும் மஹாவலி கல்வியியற் கல்லூரிகளில் வசிக்கும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும், அதேபோல் கிழக்கு, தென்கிழக்கு, ஊவா வெல்லஸ்ஸ மற்றும் பேராதனை ஆகிய பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களும் பாதுகாப்பாக உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.



உணவு மற்றும் பானங்கள் சரியான நிர்வாகத்தின் கீழ் தடையின்றி வழங்கப்பட்டு வருவதாகவும், பெற்றோர்கள் அநாவசியமாகக் கவலைப்பட வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இருப்பினும், தொடர்ந்துள்ள மின்சாரத் தடைகள் காரணமாக பல பகுதிகளில் தகவல் தொடர்பு சிரமங்கள் நீடிப்பதையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

---

### அனர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில், கண்டி மாவட்டத்தில் மட்டும் இறந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்துள்ளதாகவும், மேலும் 67 பேர் காணாமல் போயுள்ளனர் எனவும் கண்டி மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

கண்டியின் ஹசலகாவில் உள்ள யஹங்கல பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் ஐந்து உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் 12 பேர் காணாமல் போயுள்ளனர்.

மேலும், கேகாலையின் புலத்கோஹுபிட்டியவில் உள்ள தேதுகல பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் 12 பேர் காணாமல் போயுள்ளனர் என பொலிஸ் துறை தெரிவித்துள்ளது.

கொழும்பில் களனி கங்கையை அண்டிய, கொழும்பு, வத்தளை மற்றும் அதனைச் சூழ்ந்த பகுதிகளில் வெள்ளநீர் வேகமாக உயர்ந்து வருவதாக அதிகாரிகள் அவசரமாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ந்து பெய்து வரும் கனமழையின் விளைவாக வத்தள, ஹன்னுப்பிட்டிய, கஹத்துடுவ, எலக்கந்த, பள்ளியாவத்த வீதி உள்ளிட்ட பல பகுதிகளில் நீர்மட்டம் கணிசமாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக, அபாய எச்சரிக்கை வலயத்தில் உள்ள குடியிருப்பாளர்கள் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற வேண்டும் என்று அனர்த்த முகாமைத்துவ மையமும், பொலிஸாரும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன. தேவையானால் படகு சேவைகளும் இயக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளில் இருந்து வெளியேற முடியாமலும் நீர் அதிகமாக காணப்படும் இடங்களில் இருந்து வெளியேற முடியாமல் தவிக்கும் மக்களுக்கு உதவுவதற்காக படகு சேவை புரிபவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் குறித்த மாவட்டங்களுக்கு பொறுப்பானவர்களை தொடர்பு கொள்வதன் மூலம் படகு சேவைகளை பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது

மக்கள் தேவையற்ற பயணங்களை தவிர்த்து, அதிகாரிகள் வழங்கும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

### மறு அறிவித்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப் பரீட்சைகளையும் காலவரையின்றி ஒத்திவைக்க தீர்மானித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

### இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட் டுள்ளன. இதனால் இன்றைய 'காலை முரசு' நாளிதழ் குறைந்த பக்கங்களுடனேயே வெளி வருகின்றது. இந்த நெருக்கடியை வாசகர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

– நிர்வாகம்

### சுகாதாரத் துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார வசதிகளைத் தடையின்றி வழங்குவதற்காக, மறு அறிவித்தல் வரை சுகாதாரப் பணியாளர்கள் அனைவருக்கும் விடுமுறைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

அனைத்து மருத்துவமனைகளினது தலைவர்களும் நோயாளர் பராமரிப்புச் சேவைகளைத் தடையின்றி 24 மணி நேரமும் இயக்கக்கூடியவாறு ஊழியர்களைப் பணிக்கு அழைப்பதற்கான வேலைத்திட்டத்தை அமைக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

அத்துடன், அவசரத் தேவைகளுக்காக அனைத்து வாகனங்களுக்கும் எரிபொருள் நிரப்பப்பட்டு, சாரதிகள் தயாராக வைத்திருக்கப்படுவதுடன், அனர்த்தப் பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் அபாயமற்ற நோயாளிகளை மருத்துவ பரிந்துரையின் பேரில் வீட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மின்சாரம் மற்றும் நீர் விநியோகத்தில் தடைகள் ஏற்படக்கூடும் என்பதால் மின்பிறப்பாக்கிகள், எரிபொருள் மற்றும் மாற்று வழிகளில் நீரைச் சேமித்து வைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட கால மருந்துகளைப் பெறும் நோயாளிகள் அனர்த்தம் காரணமாக மருந்து இல்லாமல் இருப்பின், அருகிலுள்ள சுகாதார நிலையங்கள் மூலம் மருந்துகளைப் பெறவும், தேவைப்பட்டால் மருத்துவ ஆலோசனையுடன் மருந்துகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பிரசவத்துக்குப் பிந்திய தாய்மார்கள் குறித்த அபாயகரமான அறிகுறிகள் அவதானிக்கப்பட்டால், அவர்களை வசதிகள் கொண்ட மருத்துவமனைகளுக்கு உடனடியாக மாற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அவசரகால நிலையை பிரகடனப்படுத்தி சர்வதேசத்தின் உதவிகளை நாடுங்கள்

## சந்திரிக்கா கோரிக்கை

நாட்டின் அனர்த்த நிலைமைகளை கருத்திற்கொண்டு அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்துமாறும், சர்வதேச நிறுவனங்களிடமிருந்து உதவியை நாடுமாறும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

காணொலிச் செய்தி மூலம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

"இந்தத் தன்மையிலான அனர்த்த நிலைமையை இலங்கை தனியாக கையாள முடியாது. எனவே, சர்வதேச உதவிகளை நாட வேண்டும்." என்றும் சந்திரிகா வலியுறுத்தியுள்ளார்.

---

### இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிபரேஷன்' என்ற இராணுவ நடவடிக்கையை இலங்கை இராணுவம் ஆரம்பித்தது.

அந்தச் சமயத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் குடாநாட்டின் மீது லலித் அத்துலத் முதலி போன்ற தீவிரப் போக்குடையோரைக் கொண்டிருந்த ஜே.ஆரின் அரசு பொருளாதாரத் தடையை விதித்து தமிழ் மக்களை வதக்கிக் கொண்டே அந்த இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்தது.

அதனைக் கண்டித்த இந்திய அரசு, அப்படி பொருளாதாரத் தடையில் சிக்குண்டு உள்ள தமிழ் மக்களுக்கு நிவாரண பொருள்கள் வழங்கல் என்ற பெயரில் ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களைக் கப்பலில் ஏற்றி, யாழ் குடா நாட்டுக்கு அனுப்பி வைத்தது. அந்தக் கப்பல் அணியை இலங்கைக் கடற்படை தன்னுடைய கடல் எல்லை பிராந்திய முகப்பில் வைத்து வழி மறித்துத் திருப்பி அனுப்பியது.

இதனை அடுத்து 1987 ஆம் ஆண்டு ஜூன் 4 ஆம் திகதி இலங்கையின் ஆளுகைக்குட்பட்ட யாழ்குடா நாட்டின் வான் பரப்பில் அத்துமீறிப் புகுந்த இந்திய விமானப்படை விமானங்கள் யாழ் குடாநாட்டின் மீது உணவு மற்றும் நிவாரணப் பொருள்கள் அடங்கிய பொதிகளை பரசூட்டுக்கள் மூலம் தரையிறக்க வீசிச் சென்றன.

இந்திய - பாகிஸ்தான் போருக்குப் பின்னர் இந்திய விமானப்படை இன்னொரு நாட்டின் ஆளுகைக்கு உட்பட்ட வான் பரப்பை மீறித் தன் விமானத்தை அனுப்பியது அதுவே முதல் தடவை. அதன் மூலம் இலங்கை இனப் பிரச்சினையில் நேரடியான தலையீட்டுக்கு பிள்ளையார் சுழி போட்டது இந்தியா. இப்படி அடுத்த நாட்டு வான் பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து தமிழ் மக்களுக்கு நிவாரண பொருள்கள் வழங்கிய இந்திய நடவடிக்கையே 'ஒப்பரேஷன் பூமாலை ' எனப் பெயரிடப்பட்டு முன்னெடுக்கப்பட்டது.

சரி இனி விடயத்துக்கு வருவோம்.

தற்போது கொழும்பில் உள்ள இந்திய விமானத் தாங்கிக் கப்பலான ஐ.என்.எஸ்.விக்ராந்தில் உள்ள எட்டு ஹெலிகள் மற்றும் விமானங்களை இலங்கையில் பேரிடர் மீட்பு நடவடிக்கைகளுக்காக வழங்க இந்தியா முன் வந்திருப்பதான செய்திதான் நமது ஆஸ்தான செய்தியாளர் அனுப்பிய விடயம்.

அப்போது குடாநாட்டு மக்களுக்கு நிவாரண பொருள்களை வீசிய இந்திய வான்படை நடவடிக்கை 'ஒப்பரேஷன் பூமாலை' என அழைக்கப்பட்டதால் இப்போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்க இந்திய விமானங்கள் ஆற்றும் உதவியைத்தான் 'ஒப்பரேஷன் பூமாலை - இரண்டு' என்று அவர் நையாண்டி பாணியில் குறிப்பிட்டார். சற்றுப் பொருத்தமான பொருத்துகைதான் இது!

⁂

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று முன்தினம் கொழும்புக்கு ரயிலில் புறப்பட்ட 39 பயணிகள் பின்னர் பஸ்ஸில் பயணத்தை தொடர முயன்று அநுராதபுரத்துக்கு அப்பால் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்று ஒரு செய்தி நேற்று மாலையிலிருந்து பரபரப்பாக ஓடிக் கொண்டிருக்கின்றது.

வெள்ளம் காரணமாக ரயில் சேவை அநுராதபுரத்தில் நிறுத்தப்பட்டதால் அங்கிருந்து தனியார் பஸ் ஒன்றில் கொழும்புக்கு வர முயன்ற பயணிகளே இடையில் வெள்ளத்தில் சிக்கித் தப்புவதற்கு வேறு வழி இன்றி, இடைவழியில் கல ஓயா தேவாலயத்துக்கு (Our Lady Of Lourdes Church) அருகில் ஒரு வீட்டின் கூரையின் மேல் தஞ்சம் புகுந்து இருக்கிறார்கள் என்று கூறப்பட்டது.

இது, வட மத்திய மாகாணம், வட மேல் மாகாணம் ஆகியவற்றின் எல்லையில் சாலியவெவவுக்கு அருகில் உள்ளது.

கொட்டும் மழைக்கு மத்தியில் நேற்று முன்தினம் இரவில் இவ்வாறு வீட்டின் மேல் தளத்துக்கு மேல் ஏறியவர்கள் நேற்றிரவு வரை இன்னும் மீட்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. அந்த வீட்டின் கூரை உடைந்து சிலர் வெள்ளத்துக்குள் விழுந்து விட்டனர் எனவும் ஒரு செய்தி உண்டு.

வெள்ளத்தால் சூழப்பட்ட அந்த இடத்துக்கு நெருக்கமாக உயர் மின்னழுத்த மின்விநியோகக் கேபிள்கள் செல்வதால் அதற்கு நெருக்கமாக மீட்பு ஹெலிக்கொப்டர் செல்ல முடியாத நிலை இருப்பதாகவும் கூறப்படுகிறது. அதே சமயம் சுற்றுப்புறங்களில் மரங்கள், இடிபாடுகள் அதிகம் இருப்பதால் கடற்படை மீட்பு படகுகளும் அந்த இடத்தை நெருங்க முடியாத நிலை இருப்பதாகவுன் கூறப்பட்டது.

இப்படி சிக்குப்பட்டவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்திவ் நீதித்துறையில் உயர் பதவியில் இருப்பவர் என்றும் கூறப்பட்டது.

இரண்டு நாள்களாக கடும் புயலுக்கு மத்தியில் வீட்டுக் கூரையில் தாக்குப் பிடிப்பது என்பது நினைத்துப் பார்க்கவே நடுங்கும் விவகாரம்.

படைத்தரப்பில் முயற்சி எடுக்கப்பட்டும் இன்னமும் அது பலன் தரவில்லை என்று ஒரு செய்தி தெரிவித்தது.

ஊர்ஜிதப்படுத்தப்படும் விவரமான தகவல்கள் இன்று காலையில் வெளியாகக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.


⁂

அவசர கால பேரிடர்களின் போது மாவட்டங்களுக்கு பொறுப்பான மாவட்ட செயலாளர்களும் அவர்களது அதிகாரிகளும் வழமையான அரசாங்கத்தின் சிவப்பு நாடா போக்குகளைக் கைக் கொள்ளாமல் அவசர அத்தியாவசிய பொருள்களை - உணவு வகைகள், பாய், குடி தண்ணீர்ப் போத்தல்கள் போன்றவற்றை - கொள்வனவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர். வழமையான கேள்விப்பத்திர நடைமுறைகளை பின்பற்றி, இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடி நிவாரணப் பொருள்களை விநியோகிப்பது சாத்தியமற்றது. அதனால் அத்தகைய நெருக்கடிகள் வரும்போது அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்படும். அப்போது வழமையான சிவப்பு நாடா ஒழுங்கு முறைகளில் இருந்து விலகி, தேவைக் கேற்ப விரைந்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரம்மாவட்டசெயலாளர்களுக்கும் அவரை ஒட்டிய அதிகாரிகளுக்கும் வந்து விடுகின்றது.

இந்த அரசு இப்போது இந்தப் பேரிடர் சமயத்தில் அவசர கால நிலையையும் பிரகடனப்படுத்தவில்லை, நிலைமைக்கேற்ப விரைந்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரங்களை மாவட்ட செயலாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு வழங்கும் சுற்று நிரூபங்களையும் இன்னமும் விரைந்து வழங்கவில்லை என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அரசாங்கத்தை வையும் விதத்தில் பல மட்டங்களில் அரசுக்குக் காட்டமாக எடுத்துரைத்து வருகின்றார்.

நிவாரண விடயங்களில் மெத்தனத்தை காட்டும் அரசு, இந்த விடயம் குறித்து சிந்திப்பதாக தெரியவில்லை.

பாவம் மாவட்ட மட்ட அரசு அதிகாரிகள். ஒருபுறம் இன்னலில் துடிக்கும் மக்கள். மறுபுறம் பின்னாளில் பாயக் கூடிய அரச சட்ட ஒழுங்கு முறைகள். எப்படி நிலைமைகளைச் சமாளிக்க போகிறார்களோ தெரியவில்லை...!



# கற்பிட்டியிலும் தொடர் மழை வெள்ளத்தால் பாதிப்பு

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

தொடர்ந்து பெய்து வரும் கன மழையினால் ஏற்பட்ட சீரற்ற வானிலை காரணமாக கற்பிட்டி பகுதியும் பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ளது. பல்வேறு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதுவரை தமது வீடுகளில் இருந்து வெளியேறி உறவினர்களின் வீடுகளில் வசித்து வரும் நிலையில் அவர்களுக்கான சமைத்த உணவுகளை வழங்கும் நடவடிக்கைகள் கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரியதர்ஷினியின் வழிகாட்டலில் கீழ் இடம்பெற்று வருகின்றன.

அத்தோடு முழுமையாக நீரில் மூழ்கி போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ள தில்லையடி மற்றும் தேத்தாவாடி பகுதிகளுக்கு கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது நேரடி கள் விஜயத்தை மேற்கொண்டு நீரீல் மூழ்கியுள்ள பகுதிகளில் நீரினை அப்புறப்படுத்தும் செயற்பாடுகளையும் சமைத்த உணவுப் பொதிகள் வழங்கும் நடவடிக்கைகளில் கற்பிட்டி பிரதேச சபையின் புதுக்குடியிருப்பு உறுப்பினர் ஏ.ஆர்.எம் முஸம்மில் மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் கற்பிட்டி மண்டலக்குடா பகுதியில் வீடொன்று பகுதியளவில் பாதிக்கப்பட்டு கூரை இடிந்து வீழ்ந்துள்ளதையும் காணக்கூடியதாக உள்ளது .

நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் தடை பட்ட மின்சாரமும் இரவு 9 மணியை தாண்டியும் சரி செய்யப்படாத நிலையில் முழு கற்பிட்டி பிரதேசமும் இருளில் மூழ்கி உள்ளது.













# பல முக்கிய சேவைகள் ஜனாதிபதியால் அத்தியாவசியமானவை எனப் பிரகடனம்

## விசேட வர்த்தமானி நேற்று வெளியீடு

நாட்டை தற்போது பாதித்து வரும் கடுமையான பாதகமான வானிலையைக் கருத்தில் கொண்டு, 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொது சேவைகள் சட்டத்தின் கீழ் பல்வேறு வகையான சேவைகளை அத்தியாவசிய பொது சேவைகளாக அறிவிக்கும் அசாதாரண வர்த்தமானியை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க வெளியிட்டார்.

நேற்று வெளியிடப்பட்ட உத்தரவில், இந்த சேவைகளில் ஏற்படும் இடையூறுகள் சமூகத்தின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் என்றும், எனவே அவை இடையூறு இல்லாமல் தொடர வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. முக்கியமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொது நிறுவனங்கள், அரசுத் துறைகள், உள்ளூர் அதிகாரிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் வழங்கும் சேவைகளுக்கு இந்த அறிவிப்பு பொருந்தும்.

அத்தியாவசியமாக அறிவிக்கப்பட்ட சேவைகளில் மின்சாரம், பெட்ரோலியம் மற்றும் எரிவாயு உள்ளிட்ட எரிபொருள் விநியோகம், நீர் வழங்கல் மற்றும்



வடிகால், பொதுப் போக்குவரத்து, சுகாதார சேவைகள், அம்புலன்ஸ் சேவைகள், தொலைத்தொடர்பு, ஊடக சேவைகள், நீர்ப்பாசனம் மற்றும் இலங்கை மத்திய வங்கி உட்பட வங்கி மற்றும் காப்பீட்டு சேவைகள் ஆகியவை அடங்கும்.

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் வழங்கல் மற்றும் விநியோகம், சாலை, ரயில் மற்றும் விமானப் போக்குவரத்து, உள்கட்டமைப்பு பராமரிப்பு, மருத்துவமனை பராமரிப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய சுகாதார சேவைகள், அத்துடன் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர்கள் மற்றும் அவசரகால மீட்பு மற்றும் பொது நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள பிற கள அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் சேவைகள் ஆகியவையும் இந்தப் பிரகடனத்தில் அடங்கும்.

கூடுதலாக, தற்போதைய நெருக்கடியின் போது தடையற்ற பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்வதற்கு குப்பைகளை அகற்றுதல், தீயணைப்பு, கழிவுநீர் மற்றும் சுகாதாரம் போன்ற உள்ளூர் அதிகாரசபை சேவைகள் அவசியமானவையாக சேர்க்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சியான தீவிர வானிலை பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை மற்றும் பாதுகாப்பிற்குத் தேவையான முக்கிய சேவைகளுக்கு இடையூறு விளைவிக்கும் அல்லது பாதகத்தை விளைவிக்கும் சாத்தியக்கூறுகளைக் கருத்தில் கொண்டு இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் அதிகாரத்தின் பேரில் செயல்படும் ஜனாதிபதியின் செயலாளர் டாக்டர் என்.எஸ். குமநாயக்க இந்த உத்தரவில் கையெழுத்திட்டார்.





# திருகோணமலை, அம்பாறை பிரதேசங்களில் மீட்பு, நிவாரண நடவடிக்கையில் கடற்படை

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

இலங்கையை பாதித்துள்ள பாதகமான வானிலை காரணமாக பெய்து வரும் கனமழையினால், திருகோணமலை, மூதூர், கிண்ணியா மற்றும் அம்பாறைப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ச்சியாக அனர்த்த நிவாரண நடவடிக்கைகளை வெள்ளிக்கிழமை காலை முதல் கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அதன்படி, திருகோணமலையின் மூதூர், ஷாபி நகர், கிண்ணியா மயலபஞ்சவெளி மற்றும் அம்பாறை கல்முனை கித்தண்டி பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லும் பணிகள் கடற்படை அனர்த்த நிவாரணக் குழுக்களால் மேற்கொள்ளப்படுகின்றன.






நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஏன் இந்த மந்த நிலைமை?

முன்னெப்போதும் இல்லாத மிக மோசமான பேரிடர் ஒன்றை முழு நாடுமே ஒரே சமயத்தில் எதிர்கொண்டு நிற்கின்றது. இது வழமைக்கு மாறானது. இத்தகைய இயற்கை சீற்றம் முழு நாட்டையும் ஒரே சமயத்தில் சின்னாபின்னமாக்குவது புதிய விடயம்தான்.

ஆனால் இந்தப் பேரிடரை எதிர்கொள்வதில் அரசாங்கம் காட்டும் பின்னடிப்பு, செயல் திறனின்மை, மெத்தனம், மந்தபோக்கு, வேகமின்மை குறித்து எதிர்க்கட்சிகள் மோசமாக விமர்சிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

நேரத்துடன் எச்சரிக்கைகள் வெளியாகியும் பேரிடரை எதிர்கொள்ள அரசு முழுத் தயார் நிலையில் இருக்காதமை தொடர்பில் அரசுத் தரப்பினரின் அரச நிர்வாக முன் அனுபவமின்மை ஒரு விடயமாகச் சுட்டப்படுகின்றது.

நூற்றுக்கு மேற்பட்டோர் உயிரிழந்து, மேலும் பல டசின் கணக்கானோர் காணாமல் போய் உள்ள நிலையில், நாட்டுக்குப் பெரும் சேதமும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இன்னமும் அரசாங்கம் நாட்டில் அவசர காலநிலையைப் பிரகடனப்படுத்தவில்லை.

அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி அதனடிப்படையில் நிவாரண மற்றும் மீட்பு நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுங்கள் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியும் அதைச் செய்வதற்கு அரசு மறுத்துவிட்டது என்பது துலாம்பரமாகி உள்ளது.

எதிர்க்கட்சிகள் தரப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் சாணக்கியன் மற்றும் எதிரணி எம்.பி. ரவி கருணநாயக்கா போன்றவர்கள் அரசாங்கத்திடம் வெளிப்படையாகவே இவ்விடயத்தில் கோரிக்கை முன்வைத்து நின்றனர். அதேபோல முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்துங்கள், அந்தப் பின்புலத்தில் உலக நாடுகளின் உதவியைக் கோருங்கள் என்று பகிரங்கமாகக் கூறியிருக்கின்றார்.

ஆனால், அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்த அரசு ஒரேயடியாக மறுத்து விட்டதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்தினால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை தடைப்படும் என்று அந்தப் பின்னடிப்புக்கு நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார விளக்கமளித்திருக்கிறார் என்றும் ஒரு தகவல் வெளியாகி இருக்கின்றது.

எது, எப்படியாயினும் இவ்வளவு மோசமான பேரிடருக்குப் பின்னரும் அரசு அவசர கால நிலையை பிரகடனப்படுத்தவில்லை. மாறாக பேரிடர் விடயங்களில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சேவைத்துறைகளை அத்தியாவசிய சேவைகளாக விசேட வர்த்தமானி மூலம் ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.

இத்தகைய பேரிடர்களை - பேரனர்த்தங்களை உலக நாடுகள் எதிர்கொள்ளும்போது மற்றைய சக நாடுகள் அவற்றுக்கு விழுந்தடித்து உதவுவது வழமை. இலங்கையும் இந்த நெருக்கடி சமயத்தில் சர்வதேச உதவியைப் பெற விரும்புகின்றது. அதை நாடுகின்றது. ஆனால் தன்னுடைய நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிக்கு அவசர காலநிலயைப் பிரகடனப்படுத்தப்படக்கூடிய அளவுக்கு சிக்கல் இருப்பதாக நாட்டின் அரசாங்கமே கருதாத போது, உலக நாடுகள் எவ்வாறு இந்தப் பேரிடரைக் கணித்து அது விடயத்தில் இலங்கைக்கு உதவ முன் வரும் என்பது கேள்விக்குறிதான்.



# பேரனர்த்தங்களின் போது அரசின் அதிகாரிகள் சுதந்திரமாக பணியாற்ற சுற்றறிக்கை அவசியம்

## தேசிய அனர்த்த முகாமைத்துவ சபைக்கூட்டத்தில் சாணக்கியன் எம்.பி. வலியுறுத்து

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக, அவசரகால அனர்த்த நிலைமையை கருத்திற்கொண்டு எடுக்கப்படவேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் தேசிய அனர்த்த முகாமைத்துவ சபை நேற்று முன்தினம் பாதுகாப்புத் தலைமையகத்தில் கூடி விரிவாக ஆராய்ந்தது.

அனைத்து ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி தலைவர்களுடனும் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் மற்றும் மருத்துவர் ப. சத்தியலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

“அனர்த்தம் நிகழும் போது ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் இராணுவ அதிகாரி ஒருவரை நியமித்தல் வேண்டும். இராணுவ அதிகாரியை நியமிக்கும் பட்சத்தில் முப்படையினரால் செய்யப்படகூடிய அனைத்து உயிர்க்காப்பு விடயங்களையும் இலகுவாக கையாளக்கூடியவாறு இருக்கும். ஆகவே கட்டாயம் இராணுவ அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும்“ – என இக்கலந்துரையாடலின் போது நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கத்தினால் கருத்து முன்வைக்கப்பட்டது

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அவசரமான பொருள்களை கொள்வனவு செய்வதற்கான அதிகாரத்தை மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கும்படியும், அதற்கான சுற்றுநிருபத்தை ஜனாதிபதி வெளியிட வேண்டும் எனவும் இரா. சாணக்கியன் கேட்டுக்கொண்டார்.

மக்களுக்கான நிவாரண சேவையை முன்னெடுப்பதற்காக மூன்று வகையான நிவாரணத் திட்டங்கள் அங்கு முன்வைக்கப்பட்டன. இதன்போது மூன்று கட்டங்களாக நிவாரணம் வழங்கி வைக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

முகாம்களில் இடம்பெயர்ந்துள்ளவர்களுக்கு இராணுவத்தினரால் சமைத்த உணவும், பின்னர் உலர் உணவும் வழங்குவதாகவும், உறவினர் வீட்டில் உள்ளவர்களுக்கு உலர் உணவு வழங்குவதாகவும், தங்கள் வீடுகளில் நெருக்கடியில் உள்ளவர்களுக்கு சமைத்த உணவு வழங்குவதாகவும் தெரிவித்தார்.

ஆனால் இதனை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளமையினால் தாம் ஏற்கனவே கூறிய விடயத்திற்கும், நிவாரணம் வழங்குவதற்கும் சேர்த்து அதிகாரபூர்வமாக எழுத்துமூல சுற்றறிக்கையினையோ அல்லது வர்த்தமானியையோ வெளியிட வேண்டும், அப்போதுதான் அரச அதிகாரிகள் சுதந்திரமாக பணியினைச் செய்ய முடியும் என சாணக்கியன் சுட்டிக் காட்டினார்.

மேலும், தற்போதுள்ள தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனர்த்த முன்னாயத்தம் தொடர்பாக அனுபவம் போதாமையின் காரணமாக ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி எனும் பாகுபாடுன்றி மக்களுக்குத் தேவையான உதவிகளை அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு அரச அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும் எனவும் சாணக்கியன் கோரினார்.

இரண்டு நாள்களாகப் பல பிரதேசங்களில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது. இதனால் அனைத்து தகவல் பெறும் நிலையும் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனையும் மிக விரைவாக சீர்செய்ய வேண்டும் எனவும் சாணக்கியன் அங்கு குறிப்பிட்டார்.





# இலங்கைக்கு இந்தியா உதவிக்கரம்




இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு உதவ இந்தியா தயாராக உள்ளதென இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அவர் தனது எக்ஸ் தளத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அந்த பதிவில் மேலும் தெரிவித் திருப்பவை வருமாறு:-

“டித்வா சூறாவளியால் தங்கள் அன்புக் குரியவர்களை இழந்த இலங்கை மக்களுக்கு எனது மனமார்ந்த இரங்கல்கள். பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களின் பாதுகாப்பு, ஆறுதல் மற்றும் விரைவான மீட்சிக்காக நான் பிரார்த்திக்கிறேன்.

ஒபரேஷன் சாகர் பந்துவின் கீழ் நிவாரணப் பொருள்கள், மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண ஆதரவு அவசரமாக அனுப்பப்பட்டுள்ளன.

நிலைமை தீவிரமடைந்தால் மேலும் உதவி மற்றும் நிவாரணங்களை வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை கொள்கை மற்றும் தொலை நோக்கு பார்வை மஹாசாகர் வழிகாட்டு தலின் கீழ், இந்தியா தேவைப்படும் நேரத்தில் இலங்கையுடன் தொடர்ந்து உறுதியாக நிற்கிறது” என பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார்.

---

# கண்டி - ஹசலக்க யஹன்கல மண்சரிவில் பலியானோரில் எழுவரின் சடலங்களே மீட்பு

## இன்னும் 21 பேரைக் காணோம் என்று தகவல்



கண்டி - ஹசலக்க யஹன்கல மலைப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை ஏற்பட்ட பெரிய அளவிலான மணசரிவு பேரழிவில் சிக்கி உயிரிழந்த ஏழு பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியான கனமழை காரணமாக ஏற்பட்ட இந்த திடீர் மண்சரிவு முழு கிராமப்பகுதியையே தாக்கி பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொலிஸ் மற்றும் மீட்புப்படை அதிகாரிகள் இணைந்து நடத்திய தேடுதல் மற் றும் மீட்பு பணிகளின் பின்னர் இன்னும் 21 பேர் காணாமல் போயுள்ளனர் என அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

# மீட்புப் பணிகளுக்கு ரூ. 3 ஆயிரம் கோடி!



நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணிகளுக்காக 30 பில்லியன் (மூவாயிரம் கோடி) ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

முழு நாட்டிலும் தற்போதுள்ள அனர்த்த நிலைமை தொடர்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற காணொலி அழைப்பின் போதே பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய மேலும் தெரிவிக்கையில் -

தகவல்களை வழங்குவதில் ஊடகங்கள் மிகுந்த பொறுப்புடன் செயல்பட வேண்டும். அத்துடன் மீட்பு நடவடிக்கைகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பு பெறப்படும்.

அபாயகரமான பகுதிகளில் உள்ள மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லும் பணிகளைப் பொலிஸ், இராணுவம் மற்றும் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

அனர்த்தத்தில் சிக்கிய மக்களின் உடைமைகளைப் பாதுகாக்க, பாதுகாப்புப் பிரிவுகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதில் பொலிஸ், முப்படையினர், தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம், மாவட்ட அதிகாரிகள், பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களும் அதிகாரிகளும் பெரும் பங்களிப்பு செய்து வருகின்றனர்.

அனர்த்த மற்றும் நிவாரண சேவைகளுக்காக 1.2 பில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், மேலதிகமாகத் தேவைப்படின் மேலும் நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதமர் தெரிவித்தார். - என்றார்.



# தலைநகரிலும் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

"டித்வா" சூறாவளியின் தாக்கத்தால் நாடு முழுவதும் பலத்த காற்றும் கனத்த மழையுடனான வானிலை தொடர்வதோடு, நேற்று கொழும்பில் உள்ள பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வீதியில் மரங்கள் வீழ்ந்தமையால் ஆங்காங்கே போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தபட்டிருந்ததுடன், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பரிய வெள்ள அனர்த்தம் தலைநகரில் ஏற்பட்டது. தொடரும் வானிலையால் கொழும்பு வரலாறு காணாத மோசமான வெள்ளத்தை சந்திக்க நேரிடும் என நீர்ப்பாசனத் திணைக்களம் எதிர்வுக் கூறியுள்ளது.

வங்காள விரிகுடாவில் இலங்கையின் தென் கிழக்குப் பகுதியை அண்மித்த கடற்கரையில் ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு நிலை சூறாவளியாக வலுபெற்று தற்போது நிலப்பகுதியை ஊடறுத்து வட மேற்கு நோக்கி நகர்கின்றது. இந் நிலையில் வியாழக்கிழமையும் வெள்ளிக் கிழமையும் கொழும்பில் பொழிந்த கன மழை மற்றும் வீசிய கடுங்காற்று காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

காற்றினால் பிரதான வீதிகளில் மரங்கள் முறிந்து விழுந்திருந்தன. வீடுகள், கடைகள், நிறுவனங்கள் என பலவற்றுக்கு கடுமையான சேதம் ஏற்பட்டிருந்தது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை கொழும்பில் பல பகுதிகளில் மழை நீர் வழிந்தோடமால் தேங்கி வெள்ளம் ஏற்பட்டிருந்ததை காணக் கூடியதாக இருந்தது. காற்றின் வேகத்தில் அள்ளுண்டு செல்லப்பட்ட தகரங்கள், வர்த்தக நிலையங்களின் பெயர் பலகைகள், பதாதைகள் என பல பொருள்கள் வீதிகளில் காணக் கிடைத்தன.

முறிந்து விழுந்த மரங்கள் உட்பட போக்குவரத்துக்குத் தடையாக இருந்தவற்றொ பொலிஸார், இராணுவத்தினர் உடனடியாக செயற்பட்டு அப்புறப்படுத்தியிருந்தனர்.

அதிகமழை காரணமாக களனி கங்கை பெருக்கெடுத்துள்ளமையால் கடவத்தை முதல் கடுவெல வரையிலான அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கால் கடவத்தை அதிவேக நெடுஞ்சாலையின் வாயில் நீரில் மூழ்கியுள்ளமையால் போக்குவரத்து மீள் அறிவிப்பு வரும் வரை நிறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு தேசிய வைத்தியசாலையின் 4 ஆம் இலக்க நுழைவாயில் வீதி, எல்விட்டிகள மாவத்த வீதி, ரெஜின வீதி சந்தி, கொட்டாஞ்சேனை மற்றும் பிரேமசிரி கோமதாஸ மாவத்தை ஆகிய வீதிகளில் போக்குவரத்து தடைபட்டது.

வீதிகளில் முறிந்து கிடந்த மரக்கிளைகள் மற்றும் விழுந்துக் கிடந்த மரங்கள் ஆகியவற்றை இராணுவத்தினர் மற்றும் இடர் முகாமைத்துவ பணியாளர்களால் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

களனி கங்கையின் நீர்மட்டம் உயர்வடைந்த நிலையில் களணி கங்கையை அன்டிய தாழ் நிலப்பகுதிகள் நீரில் மூழ்கியிருந்தன. வத்தளை, களணி, வெல்லம்பிட்டி, கொலன்னாவ , சேதுவத்தை, தெமட்டகொடை, நவகம்புர மற்றும் அவிசாவல்லை ஆகிய பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

அவிசாவளையில் உள்ள நீர் மானிப்படி 2016 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாரிய வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.











# இரணைமடு குளத்தின் சகல வான் கதவுகளும் திறந்து விடப்பட்டன!

அதிக மழை பெய்து வருவதன் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான குளமான இரணைமடு குளத்துக்கி தற்பொழுது நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக நேற்றுக் காலை முதல் இரணைமடு குளத்தின் அனைத்து வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள் ளன.கனகாம்பிகைக் குளமும் தற்பொழுது வான் பாய்ந்த வண்ணம் உள்ளது. கல்மடு குளம் தனது கொள்ளளவை எட்டி வான் பாய ஆரம்பித்துள்ளது.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு குளத்தின் நீரேந்தும் பகுதிகள் வாழும் மக்கள் மிகுந்த அவதாரத்துடன் செயல்படுமாறும் தமது பாதுகாப்பினை உறுதி செய்து கொள்ளுமாறும் அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்



# டித்வா புயலால் புதுச்சேரி, காரைக்காலில் பாடசாலைகள், கல்லூரிகளுக்கு விடுமுறை

## விமான சேவைகள் ரத்து

டித்வா புயல் காரணமாக புதுச்சேரி, காரைக்காலில் இன்று சனிக்கிழமை பாடசாலைகள், கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

டித்வா புயலால் புதுச்சேரிக்கு அதி கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.



இந்நிலையில், நேற்று மாலை கல்வியமைச்சர் நமச்சிவாயம் வெளியிட்ட உத்தரவில், "டித்வா புயல் காரணமாக அதிக கனமழை பொழியும் என்பதால் இன்று புதுச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனாம் ஆகிய 4 பிராந்தியங்களிலும் அனைத்து அரச பாடசாலைகள், அரசு உதவி பெறும் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் மற்றும் அனைத்து கல்லூரிகளுக்கும் விடுமுறை விடப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி மாநிலத்தில் இருந்து இயக்கப்படும் விமான சேவைகள் அனைத்தும் இன்று சனிக்கிழமை ரத்து செய்யப்பட்டுள்ளன. அதன்படி ஹதராபாத்தில் இருந்து புதுவைக்கு வரும் விமானமும், புதுவையில் இருந்து பெங்களூர் சென்று வரும் விமானமும், புதுவையில் இருந்து ஹைதராபாத் செல்லும் விமானமும் ரத்து செய்யப்பட்டுள்ளன. இந்த தகவலை விமான நிலைய இயக்குனர் ராஜசேகர் ரெட்டி தெரிவித்துள்ளார்.

## 'டித்வா' புயல் நாளை தமிழகத்தை நெருங்கும்:

# அதி கனமழை எச்சரிக்கை காரணமாக இன்று தமிழகத்தில் பாடசாலைகளுக்கு விடுமுறை!

அதி கனமழை எச்சரிக்கை காரணமாக தமிழகம் முழுவதும் அனைத்து பாடசாலைகளுக்கு இன்று னிக்கிழமை விடுமுறை விடப்படுவதாக தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பள்ளிக் கல்வித் துறை நேற்று வெளியிட்ட அறிவிப்பில், "கடலோர மாவட்டங்கள் மற்றும் அவற்றை ஒட்டியுள்ள மாவட்டங்களில் சனிக்கிழமை அதிகனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. எனவே, தமிழகம் முழுவதும் அனைத்து பாடசாலைகளுக்கும் சனிக்கிழமை விடுமுறை விடப்படுகிறது. பபாடசாலைகளில் சிறப்பு வகுப்புகள் எதுவும் நடத்தக் கூடாது." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பகுதியில் இருந்து வட மேற்காக நகர்ந்து வரும் 'டித்வா' புயல் நாளை அதிகாலை வட தமிழகம், புதுச்சேரி, தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளுக்கு அருகே நிலவக்கூடும். இதன் காரணமாக, டெல்டா மற்றும் அதை அண்மித்த கடலோர மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்சமாக மணிக்கு 90 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

டெல்டா மற்றும் அதை அண்மித்த கடலோர மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்சமாக மணிக்கு 90 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த சூறாவளிக் காற்று வீசக்கூடும். இதர கடலோர மாவட்டங்களில் அதிகபட்சமாக 75 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். இன்று மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் அதிகனமழை ( சிவப்பு எச்சரிக்கை) பெய்யக்கூடும். ஒருசில இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்யும்.



புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர், திருச்சி, சேலம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர், ராணிப்பேட்டை மாவட்டங்கள், காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல், கரூர் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழையும் பெய்யக் கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

## டித்வா' புயல் எச்சரிக்கை:

# தனுஷ்கோடியில் இருந்து மீனவர்கள் வெளியேற்றம்



டித்வா புயல் எச்சரிக்கை எதிரொலியாக தனுஷ்கோடியில் இருந்து மீனவர்கள் வெளியேற்றப்பட்டு, புயல் பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

டித்வா புயல் காரணமாக ராமநாதபுரம் மாவட்டத்துக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தனுஷ்கோடியின் மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீரிணை கடல் பகுதிகள் சீற்றத்துடன் காணப்படுகின்றன. நேற்று முன்தினம் தனுஷ்கோடி கடலில் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று தனுஷ்கோடி, முகுந்தராயர் சத்திரம், அரிச்சல்முனை பகுதிகளுக்குச் செல்ல பொலிஸார் தடை விதித்தனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தனுஷ்கோடி மீனவக் கிராமங்களான கம்பிப்பாடு, பாலம் பகுதிகளிலிருந்து மீனவ மக்களை பேரிடர் மீட்புக் குழுவினர் மற்றும் வருவாய்த் துறையினர் அழைத்து வந்து, இராமேஸ்வரம் தீவில் அமைக்கப்பட்டுள்ள பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையங்களில் தங்க வைத்தனர். மேலும், தனுஷ்கோடி வீதியும் மூடப்பட்டது. இதனால் தனுஷ்கோடிக்கு சுற்றுலா வந்தவர்கள் மற்றும் பக்தர்களை போலீஸார் ராமேசுவரம் புதுரோடு அருகே திருப்பி அனுப்பி வைத்தனர். புயல் தாக்கத்தால் பாம்பன் மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீரிணை கடலோரப் பகுதிகளில் நேற்று மணிக்கு 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியது. மேலும், இடைவிடாத மழையும் பெய்து வருகிறது.

# இன்றைய ராசி பலன்கள்- 29.11.2025




உங்கள் முன்னேற்றத்துக்கான முயற்சிகளை எடுப்பீர்கள். உங்கள் லட்சியங்களை அடைய நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். வாழ்வில் வரும் மாற்றங் களை நடைமுறைப்படுத்த தைரியமாக இருங்கள்.

உங்களது தற்போதைய பணியில் திருப்தியின்மை காணப்படும். மேலும் உங்கள் வளர்ச்சிக்காக பணி மாற்றம் விரும்புவீர்கள். உறவில் புரிந்துணர்வை பராமரிக்க உங்கள் துணையை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இன்று குறைந்த அளவு பண வரவே காணப்படும். அதிக பொறுப்புகள் காரணமாக அதிகமாக செலவு செய்ய நேரும்.




இன்று வாய்ப்புகள் நிறைந்து காணப்படும். என்றாலும் முடிவெ டுக்கும் போது நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

நீங்கள் எளிதாக பணியாற்று வீர்கள். பணியிடத்தில் உங்கள் திறனுக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெறுவீர்கள். ஊக்கத்தொகையாக பண வரவு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை ஒன்றாக இணைந்து பகிர்ந்து மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு திருப்திகரமாகவும் போதுமான தாகவும் இருக்கும்.

பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது.




உங்கள் முயற்சிகளில் நீங்கள் விரும்பும் பலன் கிடைக்கும். இன்று எதிர்பாராத சில நன்மைகள் உங்களுக்கு மகிழ்ச்சியை தரும்.

இன்று நீங்கள் விரைவாகப் பணியாற்றுவீர்கள்.அதையும் எளிதாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை கழிப்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.




இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த் துக் கொள்ள வேண்டியது அவசியம். மனதில் குழப்பம் இருக்கும் என்ப தால் முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அமைதியைப் பராமரிக்க வேண்டும்.

செலவுகள் அதிகரிக்கும் என்பதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். தேவையற்ற செலவுகள் ஏற்படும். சளி, இருமல் அல்லது தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் ஆரோக்கியத்தைக் கவன மாகப் பார்த்துக் கொள்ளவும்.




உங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். உயர்ந்த இலட்சியத்தைக் கொள்ள வேண்டும்.

உங்கள் திறமைக்கு மேலதி காரிகளின் பாராட்டு கிடைக்காது. இது உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். சிறந்த முறையில் பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் நடக்க வாய்ப்புள்ளது. நீங்கள் இருவரும் மற்ற வர்களின் தேவையை புரிந்து கொள்ள வேண் டும்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படாது. செலவுகள் அதிகமாக காணப்படும்.

கால் வலியால் அவதிப்படுவீர்கள். முறையான உடற்பயிற்சி உங்கள் ஆரோக்கியத்துக்கு நல்லது.




தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் பணியில் அதிக கவனம் தேவை. பொறுப்புக்களின் காரணமாக இன்று பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நட்பான அணுகுமுறை சிறந் தது.

செலவுகள் அதிகமாக இருக்கும். நிதிநிலையில் சமநிலையைப் பராமரிப்பது இன்று கடினமாக உணர் வீர்கள்.

சளி அல்லது இருமல் பாதிப்புகள் ஏற்படலாம். ஆரோக் கியத்தில் கவனம் செலுத்தவும்.




தகவல் பரிமாற்றங்களை கவன மாகக் கையாள வேண்டும். யதார்த் தமாக இருக்க வேண்டியது அவசி யம். பொறுமையைக் கையாள வேண்டும்.

சில பணிகள் குறித்தநேரத்தில் முடியாது. உங்கள் நேரத்தை பயனுள்ளதாக ஆக்க திறமை தேவை.

நீங்கள் உணர்ச்சிவயப்பட்டு அந்த உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் அமைதியின்மை ஏற்படும்.

நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்காது. அதிக செலவினங்கள் காணப்படும்.

பல் வலிக்கான சாத்தியம் உள்ளது. உங்கள் ஆரோக்கியத்தை கவனித்துக்கொள்ள வேண்டும்.




தைரியத்துடனும் உறுதியுடனும் முன்னேறுவீர்கள். இன்று முக்கியமான முடிவுகளை எடுப்ப தற்கு உகந்த நாள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிக்க போதுமான வாய்ப்புகள் காணப்படும். உங்களுக்கு கொடுத்த வேலையை குறித்தநேரத்திற்குள் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருப்பதன் காரணமாக உங்களின் சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள்- 29.11.2025




இன்று அனுகூலமான நாள். நீங்கள் விரைந்து செயலாற்று வீர்கள். இன்று அதிர்ஷ்டம் காணப்படும்.

உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெறுவீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இருவருக்குமிடையே மகிழ்ச்சி காணப்படும்.

உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.




இன்று அதிர்ஷ்டகரமான நாளாக இருக்காது. என்றாலும் உங்கள் கடின முயற்சி மூலம் உங்கள் திறமைகளை நிரூபிக்கலாம். தடைகளைக் கண்டு லட்சியத்திலிருந்து விலகாதீர்கள்.

பணியில் தவறுகள் நேரலாம். இதனால் உங்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாகலாம். சிறிது கவனமுடன் இருக்கவும்.

உங்கள் துணையுடன் கடுமையாகப் பேசுவீர்கள் அல்லது வன்மையுடன் நடந்து கொள்வீர்கள். இது உங்கள் மகிழ்ச்சியை கெடுக்கும்.எனவே இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். நிதி நிலைமையில் ஸ்திரத்தன்மை பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. அதிக நீரைப் பருகவும்.




சிக்கல்களில் சிக்காமல் இருக்க இன்று உங்கள் செயல்களில் பொறுமை தேவை.இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

உங்கள் சக பணியாளர்களுடன் சில பிரச்சினைகள் ஏற்படும். இதனால் உங்கள் பொறுப்புகளை நிறைவேற்று வதில் தடைகள் இருக்கும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்கையில் கவனம் தேவை. எரிச்சலூட்டும் நடத்தை அல்லது கடுமையான வார்த்தைகள் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் தவிர்ப்பது நல்லது. இல்லையெனில் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.

அதிக உடல் உழைப்பின் காரணமாக கால் வலி ஏற்படலாம். உடல் நலத்தில் கவனம் செலுத்தவும்.




இன்றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

உங்கள் பணியில் திருப்தி கிடைக்கும். சகபணியாளர்களும் தரவாக இருப்பார்கள்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வர்கள். இதனால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். இன்று வரும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# வடக்கை நோக்கி நகருகின்றது “டித்வா“ புயல் இன்று பிற்பகலுக்குப் பின் நிலைமை சீராகும்

டித்வா புயல் நேற்று திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய்க்கும் மெதிரி கிரியவுக்கும் இடையில் மையம் கொண் டிருந்தது. இது தொடர்ந்து வடக்கு வட மேற்கு திசை நோக்கி நகர்ந்து வரு கின்றது.

இது இன்று நண்பகலுடன் இலங் கையை – குறிப்பாக வடக்கு மாகாணத்தை – விட்டு நீங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

வடக்கு, வட மேற்கு, கிழக்கின் சில பகுதிகள், மேற்கு மத்திய மாகாணங்க ளுக்கு கிடைத்து வரும் கன மழை இன்று காலை வரைத் தொடரும் என எதிர்பார்க் கப்படுகிறது.

குறிப்பாக வடக்கு மாகாணத்திற்கு அதிக ஈரப்பதன் மிக்க மழை மேகங்கள் குவிக்கப்படுகின்றன. ஆகவே வடக்கு மாகாணத்திற்கு தொடர்ச்சியாக கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. நேற்று மாலை முதல் காற்றும் வேகமாக வீசும் என எதிர்பார்க்கப்பட்டது.

வடக்கு மாகாணத்திற்கு குறிப்பாக வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளி நொச்சி மாவட்டங்களுக்கு ஏற்கனவே மிகக்கனமழை கிடைத்துள்ளது. தற்போ தும் கன மழை கிடைத்து வருகின்றது.

பல குளங்கள் வான் பாய்கின்றன. பல குளங்களுக்கு வான் கதவுகள் திறந்து




விடப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தின் அருவியாற்றின்(மல்வத்து ஓயா) கீழ்ப் பகுதிகளுக்கு அதிக நீர் வரத்து தொடர்ந் தும் இருக்கும்.

ஏனெனில் அதன் நீரேந்து பிரதேசங் களில் கன மழை கிடைத்து வருகிறது. எனவே வவுனியா, முல்லைத்தீவு, மன் னார் மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களின் தாழ்நிலப் பகுதியில் உள்ள மக்கள் மிக அவதானமாக இருப்பது அவசியம்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நேற்றை பிற்பகல் முதல் மழை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. நேற்று இரவும் கனமழை தொடர்ச்சியாகப் நீடித்தது. தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் போதுமான தயார்ப்படுத்தலோடும் எச்சரிக்கையோடும் இருப்பது அவசியம் என அறிவிக்கப்பட்டிருந்தது.

கிழக்கு மாகாணத்திற்கு அவ்வப்போது மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும். எனினும் மட்டக்களப்பு மற்றும் அம்பாறைக்கு நேற்று மாலை முதல் மழை படிப்படியாக குறைவடையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஆறு களின் நீர் வரத்து தொடர்ந்தும் இருக் கும்.

இன்று பிற்பகலுக்கு பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாடு முழுவதும் இந்த அதி தீவிர வானிலை நிலைமை படிப்படியாக சீரடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.